தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST®

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16




இதழின் உள்ளே....


☆ ஆசிரியருரை
☆ உலக அளவில் பிரசித்திபெற்ற
J.C.சோட் அவர்களின் செய்தி
☆ பெண்களுக்கான பகுதி
☆ சிறுவர்களுக்கான பகுதி
☆ வேத அறிவுப் போட்டி
☆ நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
☆ நாளும் நடப்பும்



ஆசிரியர்
B.அர்ஜுனன்



மரம் 7 2007 ஜுலை கனி 8

# ஒலிவ மலை
## THE MOUNT OF OLIVES

இது எருசலேம் பட்டணத்திற்கு கிழக்கே உள்ள ஒரு மலைத்திடல். ஒலிவமலையில் நாலு உச்சிகளிருக்கிறது. இவைகளில் ஒன்றுக்கு பரத்திற்கேறின மலை என்று பெயர். வேதாகமத்தில் சொல்லப்பட்ட சில விசேஷ இடங்கள் இவ்விடத்திலுண்டு. மேலும் கெத்செமனே தோட்டம் இந்த மலைச் சார்பில் ஒன்றின் மேல் இருந்தது.


தாவீது முகத்தை மூடி ஒலிவமலையின் மேல் ஏறிப்போனான் 2சாமுவேல்15:30. அந்நாளில் அவர் பாதங்கள் ஒலிவமலையின் மேல் நிற்கும் ஒலிவமலை நடுமையத்தில் பிளந்துபோம் சகரியா14:4.

இயேசு ஒலிவமலையில் உட்கார்ந்தார் மத்தேயு24:3

*S.Rajaprasath*
*Madurai*




கிறிஸ்துவின் சபையார் வழங்கும்
கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி





உங்கள் WIN TV -யில்
ஒவ்வொரு வாரமும் திங்கள்,
செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
காலை 6.15 முதல் 6.30 மணி வரை
பாருங்கள். மேலும்
உங்கள் வானொலியில் இலங்கை
ஆசிய சேவை SW 49 மீட்டரில்,
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல்
6.00 மணி வரை கேளுங்கள்.

செய்தியாளர்
B. அர்ஜுனன்



THE WORD OF CHRIST
P.O.BOX.5
BATLAGUNDU -624 202 S.INDIA
Phone: 04543 263278 Mobile: 9443558041

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மரம் – 7** **ஜூலை – 2007** **கனி – 8**


ஆசிரியருரை

# என்னைப்போலாகுங்கள்

# Be as I am



என்னைப்போலாகுங்கள் என்ற தலைப்பைப் பார்த்தவுடன் இது என்ன நாம் இவரைப்போல மாறவேண்டுமா? என்று நினைத்து விடாதீர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபையாருக்கு எழுதிய நிருபத்தில் இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார். "சகோதரரே, என்னைப் போலாகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள் கிறேன்; நான் உங்களைப்போலுமானேனே, எனக்கு நீங்கள் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை" என்றார் (கலா.4:12). இந்த வார்த்தை அநேகருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும். இவரைப்போல என்றால் இவர் திருமணம் ஆகாதவராயிருந்தார். நாமும் இவரைப்போல திருமணமாகாமல் இருக்கவேண்டுமா? அல்லது இவரைப் பின்பற்றவேண்டுமா? என்பன போன்ற கேள்வி எழுப்பலாம். அன்பானவர்களே, பவுல் ஒரு காரியத்தைக் குறித்துப்போதிக்கிறார் என்றால் அது நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு எழுப்புதலைக் கொண்டுவரும். என்னைப்போலாகுங்கள் என்ற வார்த்தையை அநேகர் பயன்படுத்தவில்லை. ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் பயன்படுத்தியிருக்கிறார். அவர் அந்த அளவுக்கு கிறிஸ்துவைப் பின்பற்றியிருக்கிறார் என்பது தெரியவருகிறது. மேலும் அந்த வசனத்தின் பின்பகுதியில் நான் உங்களைப்போலுமானேனே என்கிறார். அப்படியென்றால் அவர் முதலாவது அவர்களைப்போல தன்னை மாற்றியிருக்கிறார் என்பது தெளிவாக புரிகிறது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உலகத்தை இரட்சிக்க மனிதனாக இப்பூமியில் அவதரித்தார். "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர் களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" (எபி.2:14). அநேகரை இரட்சிக்கும்படி பவுல் எல்லாருக்கும் எல்லாமானேன் என்கிறார். "யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவுமானேன். நியாயப்பிரமாண மில்லாதவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்போலவுமானேன். அப்படியிருந்தும், நான்

தேவனுக்குமுன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனா யிருக்கிறேன். பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும் படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும் படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" (1கொரி.9:20–22). எல்லோரையும் இரட்சிப்புக்கு நேரே வழி நடத்தவேண்டும் என்பதற்காக எல்லாருக்கும் எல்லாமானேன் என்கிறார். சிலர் இவ்வசனங்களை தவறாக புரிந்துகொண்டு குடிகாரர்களை எப்படியாவது இரட்சிக்க வேண்டும் என்று நினைத்து அவர்களோடு சேர்ந்து நானும் குடிக்க ஆரம்பித்தேன் ஆனால் என்னசெய்வது இப்பொழுது நான் அதிலிருந்து விடுபடமுடியவில்லையே. பாவத்தில் விழுந்த ஒரு மனிதனை இரட்சிக்கப்போய் நானும் அந்தப்பாவத்தில் விழுந்துவிட்டேனே என்பார்கள். பாவம் நிறைந்த உலகத்தில் இருக்கிறோம். ஆனால் பாவம் நமக்குள் போகாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். பாவ வழியில் இருக்கிறவர்களுக்கு சுவிசேஷம் சொல்லவேண்டுமே ஒழிய, நாமும் பாவம் செய்துகொண்டு சுவிசேஷம் அறிவிக்கவேண்டும் என்பதல்ல. பாவவழியில் இருக்கிறவர்களை இரட்சிக்க முயற்சிப்பதில் மிகுந்த கவனம் தேவை. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். ஆனால் அவர் பாவம் செய்யவுமில்லை, அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை. அதைப்போல ஒவ்வொரு ஊழியர்களும் மாற்றப்படவேண்டும்.

மேலும் பவுல் சொல்லுகிறார்; "நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையதினம் நீங்களெல்லாரும் தேவனைக்குறித்து வைராக்கியமுள்ளவர்களா யிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்" என்கிறார் (அப்.22:3). இன்றைக்கு அநேகருக்கு தன்னுடைய இனத்தைக்குறித்த பெருமையும், படிப்பைக்குறித்த பெருமையும் இருக்கிறது. பவுல் ஒரு சாதாரண மனிதன் அல்ல. எப்படியெனில் வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டவன், வைராக்கியமுள்ள ஒரு தேவமனிதன். இப்படியிருந்தபோதிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக தன்னையே முழுவதுமாக ஒப்புக்கொடுத்து எல்லாருக்கும் எல்லாமானேன் என்கிறான். பவுல் தன்னைக்குறித்து மேன்மையாக எண்ணியிருப்பாரேயானால் இந்த மாபெரும் ஊழியத்திற்கு தன்னை அர்ப்பனித்து இருக்கமுடியாது.

கொரிந்து சபையாருக்கு எழுதும்போது: "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்கிறார் (1கொரி.11:1). அப்படியென்றால் அதனுடைய அர்த்தம் தான் என்ன? அவர் எப்படி கிறிஸ்துவைப் பின்பற்றுகிறாரோ அந்தப்படியாக நாமும் கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறார். அவர் எப்படி கிறிஸ்துவை பின்பற்றினார்? "கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்" (கலா.6:17). ஜெராக்ஸ் காப்பி எடுக்கிறோம் எந்தவிதமான மாற்றமில்லாமல் நாம் கொடுத்த பிரதியின் நகல் அப்படியே காப்பியாகி வருகிறது. அதைப்போல கிறிஸ்துவினிடத்தில் காணப்பட்ட அனைத்து நற்கிரியைகளும் நம்மில் காணப்படவேண்டும். நடக்கை, பேச்சு, ஜீவியம் எல்லாம் அப்படியே பிரதிபலிக்கக் கூடியவராக பவுல் காணப்பட்டார். ஆகையால் தான் கர்த்தராகிய இயேசுவினுடைய

அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன் என்கிறார். பேதுருவும் இது குறித்து குறிப்பிடும்போது: "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" என்கிறார் (1பேது.2:21). அடிச்சுவடுகளை அடிபிறளாமல் பின்பற்றவேண்டும். அதற்காகவே நம்முடைய ஆண்டவர் மாதிரியை பின்வைத்துப்போயிருக்கிறார். இன்றைக்கு அநேகருக்கு அவருடைய அடிச்சுவடுகள் பாரமாக தோன்றுகிறது ஆகையால் தாங்களாக ஒரு வழியை ஏற்படுத்திக்கொண்டு அவைகளின்படி செயல்படுகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. பவுலோ, பேதுருவோ அல்லது மற்ற அப்போஸ்தலர்களோ வேதாகமத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கு விரோதமாகவோ அல்லது மாற்றியோ போதிக்க முயற்சிக்கவில்லை. கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டவைகளை பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு போதித்தனர். அதன்படியாகவும் நடந்தனர், மெய்யான சபைகளையும் உருவாக்கினர். தங்களையோ அல்லது தங்களுடைய நாமத்தையோ அவர்கள் பிரஸ்தாபப்படுத்தவில்லை.

மேலும் பவுல் சொல்லுகிறார்: "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலி.3:9–11). என்னைப்போலாகுங்கள் என்றால் அவர் முதலாவது கிறிஸ்துவைப் போலுமானார். கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி எல்லாவற்றையும் நஷ்டமென்றும், குப்பையுமாக எண்ணினார். எதற்காக? எப்படியாயினும் கிறிஸ்துவின் வருகையின்போது மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு தகுதியுடையவனாக மாறவேண்டும் என்பதற்காக அப்படிச்செய்தார். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ கிறிஸ்துவுக்காக எதை இழந்திருக்கிறாய்? கிறிஸ்துவை நீ பிரியப்படுத்த வேண்டுமானால் இந்த உலக காரியங்களில் சிலவற்றை நீ வெறுத்து தள்ளியாகவேண்டும். அதுவும் வேண்டும், இயேசுவும் வேண்டும் என்பாயாகில் நீ கிறிஸ்து இயேசுவைப்பிரியப்படுத்த முடியாது. பவுலைப்போல நான் எல்லாவற்றையும் நஷ்டமென்றும் குப்பையுமாக எண்ணுகிறேன் என்பாயாகில் நீ கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்வாய். கர்த்தரும் உன்னில் பிரியமாயிருப்பார். "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்கிறார் பவுல் (பிலி.1:21). சாவைக்குறித்த பயம் எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒருவருக்கும் அந்தவிதமான பயம் இருப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் மரித்தாலும் பிழைத்தாலும் கர்த்தருடையவர்களாக இருக்கிறார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறீர்கள்? கர்த்தருடையவர்களாய் மாற பிரயாசப்படுங்கள். பவுல் "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய

சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" என்கிறார் (கொலோ.1:24). சரீரத்தில் ஒவ்வொருவருக்கும் அநேக பாடுகள் உபத்திரவங்கள் இருக்கிறது. இத்தனை பாடுகள் இருந்தபோதிலும் பவுல் கர்த்தருடைய சரீரமான சபைக்காக குறைவுகளை நிறைவுசெய்வதில் தன்னுடைய முழுகவனத்தையும் செலுத்தியிருக்கிறார். இப்படிப்பட்ட சிந்தை ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுக்கும் எழும்புமேயானால் ஒரு உண்மையான கிறிஸ்தவத்தை நாம் உருவாக்க முடியும்.

பவுல் என்னைப்போலாகுங்கள் என்று சொல்வதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் மற்றொன்று; "நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல" (1கொரி.15:9). மனிதன் எதைவிட்டுக்கொடுத்தாலும் தன்னுடைய பதவி, பட்டத்தை விட்டுக்கொடுக்கமாட்டான். ஆனால் பவுல் இங்கே நான் அப்போஸ்தலன் என்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல என்கிறார். இது அவருடைய தாழ்மையை காட்டுகிறது. அவர் இந்த மார்க்கத்திற்கு விரோதமாக செயல்பட்டபடியால் அதைநினைத்து நான் இதற்கு தகுதியானவன் அல்ல என்கிறார். ஆனால் தகுதியற்றவர்களை தேவன் தகுதிப்படுத்துகிறார். இது கர்த்தருடைய செயலாக இருக்கிறது. மேலும், "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" (1கொரி.9:16). சுவிசேஷப்பணி ஒரு மேன்மையான பணி. இருந்தபோதிலும் மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்னுடைய கடமை என்று குறிப்பிடுகிறார். "நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே" (1கொரி.9:17). உக்கிராண உத்தியோகம் என்று சொல்லும்போது பிறர் பொருளை தன்பொருள்போல் பாவிப்பது, பாதுகாப்பது அந்தவிதமான உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டு இருக்கிறதே என்கிறார். ஆகையால் நான் சுவிசேஷத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவன். நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல நீங்களும் என்னைப்பின்பற்றுங்கள் என்று நம்மை சுவிசேஷவிஷயத்தில் உற்சாகப்படுத்துகிறார்.

மேலும், பவுலுக்கு இருந்த சிந்தை சுவிசேஷத்தை செலவில்லாமல் ஸ்தாபிப்பது. எனக்கு ஒரு சகோதரரை தெரியும். அவரிடம் சுவிசேஷ கூட்டம் நடத்தவேண்டும் எவ்வளவு செலவு ஆகும் என்று கேட்டோம். உடனே அவர் ஒரு பெரிய லிஸ்ட் தயாரித்து அனுப்பிவிட்டார். நாங்கள் அந்த லிஸ்டை பார்த்து அசந்துபோய்விட்டோம். சுவிசேஷம் அறிவிப்பது என்றாலே அநேகர் பணத்தை மையமாக வைத்து செயல்படுகின்றனர். இயேசுவின் உயிர்த்தெழுந்த செய்தியை சொல்ல எவ்வளவு பணம் செலவானது. கல்லறையைப் பார்த்த சகோதரிகள் உடனே துரிதமாக சென்று இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சீஷர்களுக்கும் சுற்றுப்புறத்தாருக்கும் அறிவித்தனர். இதற்காக அவர்கள் பணம் எதுவும் செலவுசெய்யவில்லை, பணமும் கேட்கவில்லை. நாம் கர்த்தருடைய செய்தியை சொல்லவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் போதும் மற்றவைகளை தேவன் பார்த்துக்கொள்வார் இதுவே உண்மை. பவுல் ஆசியா முழுமைக்கும் சுவிசேஷம் அறிவித்து இருக்கிறார். அவருடைய நோக்கமெல்லாம் சுவிசேஷத்தை செலவில்லாமல் சொல்லி, சபையை ஸ்தாபிப்பதே. இந்தவிதமான நோக்கம் இன்று நம் திருச்சபைகளின் மத்தியில் எழும்பவேண்டும். சுவிசேஷப்பணி

என்பது கர்த்தருடைய பணி அதற்காக நாம் ஒரு சம்பளத்தை எதிர்பார்ப்பது அவ்வளவு சிறந்ததாக நான் கருதயில்லை. நம்மை பாவத்திலிருந்து மீட்டு, நித்திய வாழ்வை கொடுப்பேன் என்று சொல்லியவருக்கு ஊழியம் செய்ய முதலாவது நம்மை நாமே பவுலைப்போல அர்பணிப்போம்.

பவுல் சுவிசேஷத்தை செலவில்லாமல் ஸ்தாபித்ததோடு நின்றுவிடாமல். கடன்பட்ட சகோதரர்களையும் மீட்டுள்ளதை நாம் படிக்கிறோம். பிலேமோனுக்கு எழுதும்போது; “அவன் உமக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும், பவுலாகிய நான் இதை என் சொந்தக்கையாலே எழுதினேன், நான் அதைச் செலுத்தித் தீர்ப்பேன்” என்று எழுதுகிறார் (பிலே.18,19). ஒநேசிமு பட்டகடனை பவுல் செலுத்திதீர்ப்பதாக சொல்லுகிறார். பவுல் செலுத்தவேண்டிய காரணம் என்ன? ஒநேசிமு ஓடிப்போன ஒரு சீஷன். அவனை கர்த்தருக்கு வளர்க்க பிரயாசப்பட்ட பவுல் அவனுடைய கடனை தான் அடைப்பதாக எழுதுகிறார். நாமும் சகோதர்களை காப்பாற்ற அவர்களுக்கு இந்தவிதமாக உதவிசெய்வது அவசியம். இவர்களுக்கு எதைச்செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று நமதாண்டவர் சொல்லுகிற வசனத்தை இங்கே நாம் நினைவுகூரவேண்டும். நாம் உதவி செய்யும்போது கர்த்தருடைய நாமத்தினிமித்தம் செய்யவேண்டும். கூடுமானால் விசுவாச குடும்பத்தார்களுக்கு நன்மைசெய்வோம் என்று பவுல் கலாத்திய சபையாருக்கு எழுதுகிறார்.

மேலும் “நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாக அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்” (2கொரி.12:15). பவுல் தன் சொந்தக் கைகளாலே வேலைசெய்து கொண்டு சுவிசேஷம் அறிவித்தவர். ஆகையால் ஆத்துமாக்களுக்காகச் செலவு செய்வதில் மிகுந்த அக்கரையுடையவராக இருந்தார். மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று லூக்.15:7–ல் வாசிக்கிறோம். அப்படியிருக்கும்போது நாமும் ஆத்துமாக்களுக்காக செலவுசெய்வதில் தயங்கவேண்டாம். உன்னதமானவரின் செய்தியை உலகுக்கு அறிவிக்க நம்முடைய பிரயாசத்தின் முழுபங்கையும் செலுத்துவோம். பவுலைப்போல ஆத்துமாக்களுக்கு செலவு செய்வதில் உற்சாகமடைவோம், பதவி பட்டங்களை மேன்மையாக எண்ணாமல் கொடுக்கப்பட்ட உக்கிரான உத்தியோகத்தை நிறைவேற்ற பிரயாசப்படுவோம், கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாக எண்ணுவோம், கிறிஸ்துவினுடைய அச்சடையாளங்களை சரீரத்திலே தரித்துக்கொள்வோம், அதிக ஜனங்களை ஆதாயம் செய்ய நம்மை முதலாவது அடிமைகளாக ஒப்புக்கொடுப்போம், எல்லாருக்கும் எல்லாமாவது என்பது ஒரு சதாரண விஷயமல்ல. நம்மை முழுவதுமாக தாழ்த்தும்போது எல்லாருக்கும் எல்லாமாக முடியும். பவுல் அந்தவிதமாக தன்னை முழுவதுமாக தாழ்த்தினார். ஆகையால் என்னைப்போலாகுங்கள் என்கிறார். நீங்கள் அவரைப்போல மாற உங்கள் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளுக்கு நேராக திருப்புங்கள். கர்த்தர் அதற்கு வேண்டிய ஞானத்தை உங்களுக்கு கொடுக்கும்படியாக உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்களென்று
உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் – 1கொரி.4:16

# ஏன் இயேசு சிலுவையில் மரித்தார்?
## Why Christ Died on The Cross?

*- J.C.Choate*



ஆதியில் தேவன் மனுஷனையும், மனுஷியையும் சிருஷ்டித்தபோது அவர்கள் குற்றமற்றவர்களாகவும் பாவமற்றவர்களாகவும் இருந்தனர். ஆனால் அவர்கள் அந்த பரிசுத்த நிலையில் அதிகநாட்கள் நிலைத்திருக்கவில்லை, சீக்கிரமாகவே அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் ஆவியில் மரித்து, அழகான ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டு, மனுஷன் தன் முகத்தின் வியர்வையால் ஆகாரம் புசிக்கவும், மனுஷி வேதனையோடே பிள்ளை பெறவும், முடிவிலே சரீரத்தில் மரிக்கவும் (ஆதி1–3) இப்படியாக தங்களுடைய பாவத்தின் விளைவினை அனுபவிக்க வேண்டியவனானான். இப்போது மனுஷன் தனக்கும் தேவனுக்குமிடையே பாவம் வந்ததால் தேவனுடைய பகைஞனானான்.

மனுஷன் குற்றமற்ற நிலைக்கு வரும்படி தானே தன்னை பழைய நிலைக்கு திருப்பிக்கொண்டு வர இயலாதபடியினாலும், அதைப்போலவே மிருக பலி தன் பாவத்தை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய முடியாதபடியினாலும், உலகத்தின் பாவங்களுக்காக குற்றமற்ற பலியாயிருக்கும்படிக்கும் தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராக ஊழியஞ் செய்யும்படிக்கும் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி, இவ்விதமாக மனுஷன் தேவனிடத்திற்கு வர ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தினார் (எபி.10:4; ஆதி3:15). எனவே குறித்த காலத்தில் கன்னிகையாகிய மரியாளுக்குப் பிறக்கும்படி தேவன் தம்முடைய குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். மரியாளுக்கு நியமிக்கப்பட்டிருந்த யோசேப்புக்குக் கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் காணப்பட்டு, "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்" (மத்.1:21).

வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்தபடியும் தீர்க்கதரிசனம் உரைக்கப் பட்டிருந்தபடியும் இயேசு இவ்வுலகத்தில் வந்தார் என அறிவிக்கப்பட்டிருக்கிறோம். ஆச்சரியம், ஆனால் தேவன் அவரை மரிக்கும்படிக்கு அனுப்பினார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா.3:16–17) என வாசிக்கிறோம். தேவன் அவரை மரிப்பதற்கு மாத்திரம் அனுப்பவில்லை, பாவிகளுக்காகவும், தேவனற்றவர்களுக்காகவும், துன்மார்க் கருக்காகவும் அவர் மரித்தார். "அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே,

குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக் கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோம.5:6–9) என பவுல் சொன்னார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக் கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா.15:12–14) என்றார். "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது' (1யோவா.4:9–10) என்று யோவான் எழுதினார்.

கிறிஸ்து பூமியிலே நன்மைசெய்கிறவராகவே சுற்றித்திரிந்தார். அவர் வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கினார், குருடருக்குப் பார்வையளித்தார், மரித்தோரை எழுப்பினார், அவர் தேவனிடமிருந்து வந்தவர் என்பதை நிரூபிக்கும்படிக்கு இன்னும் அநேக அற்புதங்களைச் செய்தார். யோவான், "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டி ருக்கிறது" (யோவா20:30,31) என்றார்.

இயேசு பரிசுத்தமுள்ளவர், அவர் பாவமற்றவர். பவுல் இயேசுவைக்குறித்து பேசுகையில் தேவனைப் பற்றி, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2கொரி.5:21) என்றார். "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை என்று பேதுரு (1பேது.2:22) கூறினார்.

மேலும் நாம், அவர் பாவமற்றவர், நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்த நல்ல மனுஷர், தேவனுடைய ஒரே பேறான குமாரன், உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என அறிவுறுத்தப்படுகிறோம். பவுல், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்" (பிலி2:8) எனச் சொன்னார். பேதுரு, "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்ய வில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது

பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1பேது.2:21–24) மேலும், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார் (1கொரி.15டுடு3) என்று பவுல் கூறினார்.

ஆனால் எதற்காக கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார், அதாவது யாரோஒருவன் ஏன் ஒரு நல்ல மனுஷரை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்க விரும்பினான்? இருந்தபோதிலும் அவர் மனிதனை இரட்சிக்கும்படியாகவந்தார் மாறுபட்ட கருத்துடைய பாவம் நிறைந்த மனிதனோடு பேசி சமாளிக்க வேண்டியவராயிருந்திருக்கிறார். தேவனுடைய பிரதிநிதிகளாக வர்ணிக்கப்படுகிற ஆசாரியர், வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் இன்னும் வேறுசிலர்கூட, மனிதருடைய கற்பனைகள் மற்றும் கட்டளைகளின் பின்னே சென்றார்கள், ஆனபடியினால் அவர்கள் பகை, பொறாமை மற்றும் துன்மார்க்கத்தினால் நிறைந்து காணப்பட்டார்கள். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" (யோவா.1:11) என அறிவிக்கப்படுகிறோம். மீண்டும் இயேசு, "அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை" (யோவா.5:40) என்றார்.

பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்ட வேளையில் இந்த மார்க்க வைராக்கியமுள்ள ஜனங்களிடம் பேசுகையில் பேதுரு, "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரணஉபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" (அப்.2:22–24) என்றார். கிறிஸ்து பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டபோது, பொறாமை யினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார் களென்று பிலாத்து அறிந்திருந்தான் (மாற்.15:9). இவ்வாறாக கிறிஸ்து தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுக்கப்பட்டார். துன்மார்க்கரின் கைகளில் அவர் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அடிக்கப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார், சபிக்கப்பட்டார், கொடூர சிலுவையில் ஆணியறையப்பட்டார், இரண்டு கள்ளர்கள் மத்தியில் நிறுத்தப்பட்டு அங்கே மரிக்கும்படி கைவிடப்பட்டார். அதன்பிறகு அவர் கீழே இறக்கப்பட்டு, துணிகளால் சுற்றப்பட்டு, கல்லறையிலே வைக்கப்பட்டு, கல்லறை வாசலில் ஒரு பெரிய கல் புரட்டிவைக்கப்பட்டது. ஆனால் இயேசு தாம் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என வாக்களித்திருந்தார். மூன்று நாட்கள் கழித்து இயேசு உயிர்த்தெழுந்த கர்த்தராக கல்லறையிலிருந்து வெளியே வந்தார். மூன்றாம் நாள் காலையில், ஸ்திரீகள் கல்லறையைப் பார்க்கும்படி வந்தபோது, ஒரு தூதன்

அவர்களுக்குத் தோன்றி, அவன், "அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" (மத்.28:6) என்றான். இயேசு தம்முடைய அப்போஸ்தலருக்குத் தரிசனமான பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார், அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆட்சி செய்யும்படி மறுபடியும் வானத்திலே பிதாவினிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு (1கொரி.15:1–8; அப்.1:1–11) இன்றும் அங்கே வீற்றிருக்கிறார்.

இப்போது மீண்டும், இயேசு சிலுவையில் ஏன் மரித்தார்? அதற்குப் பல காரணங்கள் உண்டு, ஆனால் முக்கிய காரணம் மனிதனை இரட்சிக்கும்படிக்கு மரித்தார் என்பதே உண்மையாகும். ஆனால் கிறிஸ்து அவரது மரணத்தைக் குறித்து சொல்லிய தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்படி சிலுவையில் மரித்தார் (கொலோ.2:14,யோவா.1:17, மத்.26:28) மனிதன் தன்னுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற வேண்டு மென அவர் தம்முடைய இரத்தத்தை சிந்த மரித்தார் (எபே.1:7; அப்.22:16), சபையை ஸ்தாபிக்கும்படி மரித்தார் (எபே.5:25) மேலும் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுக்கும்படி மரித்தார் (2தெச.2:16).

ஆனால் கிறிஸ்து உலகத்தை இரட்சிக்கும்படி சிலுவையில் மரித்தார் என்பது உண்மையாகயிருந்தும், உலகமுழுவதிலும் அநேகர் இழந்தவர்களாக இருக்கின்றனர். ஏன்? இதற்கு பல காரணங்கள் உண்டு. அநேகர் தேவனுடைய சித்தத்தை அறியாதவர்களாக இருக்கின்றனர். பவுல், நான் கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் அறியாமையிலே நான் சபையை துன்பப்படுத்தினேன் என்றார் (1தீமோ.1:13) மற்றவர்கள் தாங்கள் இரட்சிக்கப்படும்படி தங்களில் அல்லது ஒரு சிறந்த நன்னெறி வாழ்வில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். ஆனால் கொர்நேலியும் அவன் வீட்டாரும் நல்ல ஜனங்களாக இருந்தார்கள், ஆனாலும் இரட்சிக்கப்படும்படி கர்த்தருக்குக் கீழ்ப்படிவது அவர்களுக்கு அவசியமாயிருந்தது (அப்.10). தேவனுடைய மகிமையை விட மனுஷருடைய மகிமையை நேசிக்கிறவர்கள் அநேகர் உண்டு. கிறிஸ்து தம்மிடத்தில் விசுவாசமிக்கவர்களாயிருந்தும் தங்களுடைய நாட்களின் மதத் தலைவர்களால் தாங்கள் புறக்கணிக்கப்படுவோம் என்ற பயத்தினால் தம்மை அறிக்கை பண்ணாதவர்களைக் குறித்து பேசி, பிறகு அவர்கள் ஏன் தம்மை அறிக்கை பண்ணவில்லை என்பதைப் பற்றி விவரிக்கிறார்: "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" (யோவா.12:43). ஆம், இன்றும் இவர்களை போல் அநேகர் உண்டு. அவர்கள் சமயக் காரியங்களில் வஞ்சிக்கப்பட்ட உலக ஜனங்கள். யோவான், "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1யோவா.4:1). கள்ளப்போதகர்கள் அநேகர் இருக்கின்றபடி யினால், இப்போதும் கூட, அவர்களால் அநேகர் வழி தவறிப் போகின்றனர். மேலும் கடைசியாக, அநேகர் உலகத்தை நேசித்து, மாம்சத்தின் கிரியைகளில் சந்தோஷமடைகின்றனர். இத்துடன் ஒரே பிரச்சனை என்னவென்றால், கர்த்தர் உலகத்தில் அன்பு கூராதிருங்கள் என்று நமக்கு சொல்லுகிறார் என்பதே. மேலும் மாம்சத்தின் கிரியைகள் மரணத்திற்கு இட்டுச் செல்லும் (கலா.5;ரோம.6:23).

என்னுடைய சிநேகிதரே, நீங்கள் இரட்சிக்கப்படும்படி கிறிஸ்து உங்களுக்காக மரித்தார் என்பதை அறிந்து கொண்டீர்களா? தயவுசெய்து அவரைப் புறக்கணியாதீர்கள் அல்லது இரட்சிக்கப்படும்படிக்கு அவர் ஒருவரே பரிகாரியாயிருக்கும் போது அவரை மறுதலிக்காதீர்கள். மேலும் அவர் ஒருவரே உங்களுக்கு நம்பிக்கை அளிப்பவர். அவரில் நீங்கள் விசுவாசம் வைத்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அவர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக் கொள்வார். மேலும் நீங்கள் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் நிலைத்திருந்தால் ஒரு நாள் அவர் பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டை அருளிச்செய்வார் (மாற்.16:16; மத்.10:32; அப்.2:38,47; வெளி.2:10).

### வேத அறிவுப்போட்டி எண் 82-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| G.A. ஜான்சன் | -திருச்சி |
| Mrs. மரகததிரவியம் | -கோம்பை |
| Sis. ஜாய்மேரி | -திண்டுக்கல் |
| Mrs. எலியாம்மா | -கடலூர் |
| P. அலிஸ்மேரி | -வத்தலக்குண்டு |
| K. மோகன் | -கொ.பாளையம் |
| K.M. ஜான் | -கரடிக்குளம் |
| G.P. ஏசையன் ராஜ் | -கோபி |
| P.S. லலிதாபிரேமகுமாரி | - மதுரை |
| C.H. வித்யா ராணி | -சென்னை |
| N. கமலவேணி | -சென்னை |
| D. யேசுதாஸ் | -சித்தூர் (A.P) |

### வேத அறிவுப்போட்டி எண் 82-ன் விடைகள்

| | |
|---|---|
| 1.அநியாயத்தை | -ஏசா.32:6 |
| 2. பவுல், பிலேமோனுக்கு | -பிலே.17 |
| 3. கர்த்தரை(என்னை) | -எரே.2:32 |
| 4. ஜீவகிரீடத்தை | -வெளி.2:10 |
| 5. விரோதமாயிருக்கும் | -எசே.13:9 |
| 6. அறியாமற்போனார்கள் | -ஓசி.11:3 |
| 7. பேலிக்ஸ் | -அப்.24:26 |
| 8. பவுல் | -கலா.4:16 |
| 9. ஸ்தோத்திரஞ்செய்தலே | -எபே.5:4 |
| 10. தீங்கைக் | -செப்.3:15 |

## மணமகள் தேவை:

30வயதுள்ள ப்ளஸ்2 படித்த தனியாரில் பணிபுரியும் கிறிஸ்துவுக்குள் உள்ள மணமகனுக்கு,24 –28 வயதுள்ள கிறிஸ்துவுக்குள் படித்த மணமகள் தேவை. தொடர்பு கொள்ளவேண்டி தொலைபேசி எண்: 98848 31688 சகோ.சுந்தர்ராஜ்.

## மணமகன் தேவை:

31 வயது மணமகள், பெங்களூரில் வேலை. தொலைபேசி எண்: 98440 51387 சகோ. லெஸ்லி லாரன்ஸ்.

26 வயது மணமகள், தொலைபேசி எண்: 98405 25303 சகோ.கோபி.

24 வயது மணமகள், தொலைபேசி எண்: 98848 31688 சகோ. சுந்தர்ராஜ்

22 வயது மணமகள், தொலைபேசி எண்: 94435 60282 சகோ. மத்தாய்

26 வயது மணமகள், தொலைபேசி எண்: 044 55679262 சகோ. தேவபிரியன்

மேலும் தொடர்புக்கு: S. David Martin சென்னை 98404 25080

**பெண்கள் பகுதி**

# நான் குற்றத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன்

## I Won`t Apoligize

*-Betty Burton Choate*



ஒருவன் சச்சரவுகளில் அநீதியான வழியைச் சார்ந்திருக்கின்ற அல்லது மற்றவர்கள் மீது கெட்ட நடவடிக்கைகைளைக் காண்பிக்கின்ற வேளையில் குற்றத்தை ஒத்துக்கொள்ள மறுத்தல்– 'மனித' இயல்பாக இருக்கலாம். அல்லது இது "குற்றத்தை ஒப்புக் கொள்ளுவதின் மூலம் நான் குற்றவாளியாய் இருக்கிறேன் என நான் ஒத்துக்கொள்ளாவிட்டால், அப்புறம் இது மற்ற மனிதனுக்கு பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழி ஏற்படும்" என்ற மனநிலை வளர்ந்து கொண்டேயிருக்கலாம்.

முகத்தோற்றத்தையும் இருதயத்தையும் தெளிவுபடுத்தாதிருக்கும் எந்த அடிப்படைக் காரணமும், 'என்னை மன்னித்துவிடு' என்ற எளிய வார்த்தைகள் சண்டை நேரத்தினை முறியடிக்கும் நல்ல விளைவாக இருக்கிறது.

மனிதர்கள் வித்தியாசமான கோணத்தில் ஒருவருக்கொருவர் மிகப்பெரிய வேறுபாட்டுடன் இருக்கின்றனர். வழக்கமாக ஒரு நிச்சயிக்கப்பட்டவற்றிலிருந்து காரணமில்லா விரோதநோக்குடைய கருத்தினை மற்றவற்றில் அல்ல நம்முடைய சுய காரியங்களில் காண்கின்றோம். கணவனும் மனைவியும் அந்நியர் மத்தியில் அல்லது வேலை செய்யும் அலுவலகத்தில் வழக்கமாக காணப்படாத நாகரிகமற்ற பிரச்சனைகளை அடிக்கடி சந்திக்கின்றனர். கணவனும் மனைவியும் நாளுக்கு நாள் தங்களுடைய கஷ்டங்கள், சோர்வுகள், சவால்கள், ஏமாற்றங்கள் அடிக்கடி வார்த்தைகளாக வெடிக்கின்றன. மனநிலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன, வார்த்தைகள் அள்ளி வீசப்படுகின்றன, வேதனைகள் பாரமாக்கப்படுகின்றன, கண்ணீர்கள் சிந்தப்படுகின்றன யாரோ ஒருவர் தவறிழைத்து விட்டார்.

ஆனால் யார் தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளுவார்? ஒருவேளை யாரும் நேர்மையுடன், உணர்வடைந்து 'நான் தவறிழைத்து விட்டேன் நான் அதைச் சொல்லியிருக்கக்கூடாது' என தம்மை நிதானித்துப் பார்க்கமாட்டார்கள். பதிலாக, ஒரு குளிர்ச்சியான மௌனம் ஒரு வேளை சச்சரவினை முடிவுக்குக் கொண்டு வரும், பின்பு இருவரும் தங்களுடைய சொந்த வேலைக்குத் திரும்புவார்கள். நேரங்கள் கடந்து செல்லும், குளிர்ந்தநிலை இருவருடைய இருதயத்திற்குள் ஆழம் ஆழமாக சென்று முடிவை உண்டாக்கும். ஒரு வேளை அடுத்தநாள், அல்லது அதற்கடுத்த நாள், காரியங்கள் ஒரு வழியாக மறுபடியும் சீராகக் காணப்படும். உரையாடல் பழைய நிலையைக் கொண்டுவரும். வாழ்க்கை தொடர ஆரம்பிக்கும்.

ஆனால் இருவருடைய இருதயங்களில் என்ன நடந்திருக்கின்றது? காயங்கள் உண்டாக்கப்பட்டது, பாதுகாப்பிற்கென்று கடினமான உணர்ச்சியற்ற நிலை

உருவாக்கப்பட்டது. சுகமாக்கும் நிவாரணி உபயோகிக்கப்படவில்லை, எனவே நிரந்தர வடுக்கள் ஏற்பட்டுள்ளன.கடினமான உணர்ச்சியற்ற நிலையிலும், வடுக்களின் அடியிலும் புதைக்கப்பட்டவைகள் கோபம், மனக்காயம், மனக்கசப்பு போன்றவைகள் ஒரு வளருகின்ற ஒரு வேராக இருக்கின்றது.

அடுத்த முறை கோபம் வெளிப்படுகிறது, இது முந்தின சண்டையில் கொழுந்துவிட்டு எரிகின்றவையான கசப்பின் அடுக்கினை ஒளிவிடச்செய்கிறது— மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு, மேலும் அதற்கு மேல் ஒரு அடுக்கு ..........

எனவே திரி அணைகிறது, கோபம் அதிவேகமாக வெடிக்கிறது, கசப்பு மிகக் கசப்பாகின்றது— சண்டை மிக மோசமாகின்றது. கணவனும், மனைவியும் சண்டையிட்டுக்கொண்டிராதிருந்தாலும் கூட எப்பொழுது அவர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் மனக்கசப்பில் வளருவார்கள்? இருவருக்கிடையே ஒருவர் இன்னொருவரை விட மிகச்சிறந்தவராக எப்பொழுது நினைப்பார்கள்? இவைகளெல்லாம் திருமண வாழ்விற்குள் அல்லது விவாகரத்தின் முடிவில் பேதத்தினால் ஏற்படும் விளைவாகிய இவைகளெல்லாம் அடிப்படை பிரச்சனைகளாக இருக்கின்றன.

கணவன் மனைவி இருவரும் திரும்பிச் சென்று குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்ற தங்களுடைய தீர்மானத்தைக் குறித்து மறு யோசனை செய்ய வேண்டியது அவசியம். 'என்னை மன்னித்துக் கொள்'— எப்பேர்பட்ட எளிய வார்த்தைகள், சொல்லுவதற்கு மிக சுலபமானது, மிகவும் சத்திவாய்ந்தது!


'என்னை மன்னித்துக்கொள்' என்று நேர்மையுடன் கூறுவது என்ன விளைவை ஏற்படுத்துகிறது? முதலாவது, இது நேர்மையுடையதாக இருக்குமானால், இது ஒருவருடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கின்ற மற்றும் ஒருவர் ஒரு சார்புடையவராக அல்லது இருவர் மேலும் குற்றம் உண்டு எனவும் தீர்மானிக்கின்ற முடிவினை கொண்டுவரும். தவறை ஒப்புக்கொள்ளுகின்ற செயல் தவறான பெருமையை அழித்து, தாழ்மையான மனநிலையினை உருவாக்கும். தன் குற்றத்திற்காக மனவருந்தும் இந்த மனநிலையுடனும், குற்றத்தை ஒத்துக்கொள்ளக்கூடிய இந்த வலி நிவாரணியுடனும், இருவருடைய இருதயங்களில் குணமாக்கும் செயல் ஆரம்பிக்கும். மனக்கடினத்தின் அடுக்குகள் மற்றும் மனக்கசப்பினால் குமுறிக்கொண்டிருக்கும் ஜூவாலையும் உருகிப் போய்விடும், மேலும் கடந்த காலத்தின் பிரச்சனைகளின்றி உள்ளான சமாதானத்தின் உணர்வுகளால் நாளுக்கு நாள் நல் உறவு முன்னேற்றமடைந்து கொண்டே செல்லும்.

எபேசியர் 4:26—ல், ஆவியின் தூண்டுதலினால் பவுல் இவ்வார்த்தைகளை எழுதினார், "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது". இந்த வார்த்தைகளின் பொருள் என்ன? முதலாவது, கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கோபங் கொள்ளக் கூடாது என அவர் கூறவில்லை, அல்லது கோபங்கொள்ளுவது பாவம் என்றும் கூறவில்லை. இவ்வுலகில் தவறான காரியங்கள் பல இருக்கின்றன, மேலும் அவைகளின் மேல் கோபங்கொள்ளுவது நீதியுள்ளதும் சரியானதுமாக இருக்கிறது. ஆனால் பவுல் சொன்னார், "உங்களுடைய கோபம் பாவஞ்செய்வதற்கு இடங்கொடாதீர்கள்!" அது முழுவதும் வித்தியாசமானது. மேலும் அதிகமான ஜனங்கள் செய்யக்கூடியதும் அதுவே!

நான் ஒரு கணவனுக்குரிய நிலையினை, மனைவியினிடத்தில் கண்டிப்பு மற்றும் முன்கோபத்துடன் நடந்துகொண்ட அவளுடைய கணவனிடத்தில் கண்டிருக்கிறேன். இயற்கையான பதில் மனைவியினுடைய பங்கிலும் அதே கண்டிப்பான ஜூவாலையினை அதிகமாக தூண்டிவிட்டதைப் போல் இருந்திருக்கும். மாறாக அவள் நீதிமொழிகள்15:1-ல் சாலொமோனால் பேசப்பட்டது போல நடந்து கொண்டாள்: "மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்". பிரதியுத்திரமாக, அவள் அவர்களுக்கிடையே கோபத்தினை சகஜநிலைக்கு மாற்றிவிட்டாள், ஏனென்றால் அவள் தன் கணவன் நியாயமாக யோக்கியத்துடன் நடந்து கொண்டது போல அவள் அவனுக்குப் பதிலளிக்கவில்லை.

ஆம், அதுவே பொறுமையோடு பதிலளித்தல், மற்றும் சமாதானத்தை நாடுதல் போன்றவை கோபத்தில் சவுக்கடி கொடுப்பதைக் காட்டிலும் பிரச்சனைகளை விலக்குவதற்கு ஒரு திறவுகோலாயிருக்கிறது. பவுலுடைய எச்சரிப்பின் இரண்டாவது பாகம் நாம், 'சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்பாகவே நம் எரிச்சல் தணியவேண்டும்" என்பதாகும். நீங்கள் கோபமனதுடனே உங்கள் படுக்கைக்குச் சென்றால், நீங்கள் விழித்தெழும்போது நீங்கள் இன்னும் மோசமான உணர்வடைந்ததை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? எனவே தான் வெகு நீண்ட நாட்களுக்கு மேலாக நமக்குள் கோபம் குடிகொணடிருக்க அனுமதிக்கக் கூடாது என வெளிப்படையாகவே நாம் எச்சரிக்கப்படுகிறோம். இது அழித்து விடும்.

## ஜெபியுங்கள்



- இம்மாதம் நடைபெறவிருக்கும் 27வது வாசகர் கருத்தரங்கிற்காக...
- புதிதாக இலங்கை சர்வதேச ஒலிபரப்பில் வெளிவரும் நிகழ்ச்சிக்காக ...
- நம்முடன் இணைந்து பணியாற்றும் ஊழியர்களுக்காக ...
- CD&DVDஊழியங்களுக்காக, கொடைக்கானலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புக் ஸ்டாலுக்காக ...
- TVஊழியத்திற்கு Digital கேமரா ஒன்று வாங்கி கொடுத்த குடும்பத்திற்காக...

# உங்களுக்கோர் நற்செய்தி!

வானொலியில் மேலும் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை


தாவீது – யோனத்தானின் உரையாடல் மற்றும் தேவ செய்தியை

கொழும்பு சர்வதேச வானொலி MW 873 KHZ - ல்

காலை 8.50 முதல் 9.05 மணி வரை கேட்டு பயன்பெறுங்கள்

இது கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி



# விசேஷித்த மேன்மை
# Special Distinction

*-J.Glory Arjunan*

இன்றைய நாளில் பெண்கள் இப்பூமியிலும், விண்வெளியிலும் எத்தனை எத்தனையோ சாதனைகளைப் படைத்து மண்ணுக்கும் மகிமையைக் கொண்டு வருகின்றனர். சமீபத்தில் சுனிதா வில்லியம்ஸின் விண்வெளி சாதனை பூமியை வியக்கப்பண்ணினது. பெண்களாகிய நம்மெல்லோருக்கும் இது பெருமையை மாத்திரமல்ல எதையும் சவாலாக்கிக் கொள்ளும் ஊக்கத்தையும் அளிக்கிறது. இருந்தபோதிலும் அப்போஸ்தலனாகிய பேதுரு, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்... அவருடைய வாக்குத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (2பேது.3:10,13) என்று எழுதியிருக்கிறதை வாசிக்கும்போது எல்லாம் மாயை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. ஆம், எல்லாம் மாயை! "சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது" (பிர.1:14) என்கிறார் ஞானி சாலொமோன். இப்படியிருக்க அழிந்துபோகாத ஆவிக்குரிய காரியங்களைச் (Spiritual Matters) சிந்தித்து, அதைப் பற்றிக்கொண்டு, நீதிவாசமாயிருக்கும் புதிய இடத்திற்குச் செல்ல நம்மை ஆயத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவோம். இம்முயற்சிக்கு உதவியாக வேதாகமத்தில் விசேஷித்த இடத்தினைப் பிடித்துள்ள சில பெண்களை நமக்கு மாதிரியாகக் கொள்வோம்.

சிலுவையின் கடைசிபரியந்தமும் (Last At the Cross) இருந்தவர்கள்: இயேசுவின் சிலுவைப் பயணத்தில் கடைசிமட்டும் இயேசுவோடு இருந்தவர்கள் மகதலேனா மரியாளும் யோசேயின் (இயேசுவின் தாய்) தாயாகிய மரியாளும்தான். இயேசுவோடு உண்டு உறங்கி ஊழியஞ்செய்த இயேசுவின் சீஷர்களெல்லாரும் ஓடிவிட்டனர். ஆனால் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனாகிய யோசேப்பு என்பவன் ஒரு கனம்பொருந்திய ஆலோசனைக்காரன், இவன் வந்து இயேசுவின் சரீரத்தைப் பெற்று, மெல்லி துப்பட்டியை வாங்கிக் கொண்டு வந்து, மரித்த இயேசுவை சிலுவையிலிருந்து இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்து இவ்விதமாக அடக்கம்பண்ணினான். "அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்" (மாற்.15:47). அப்படியானால் இந்த ஸ்திரீகள் கல்லறைவரைக்கும் சென்றிருக்கிறார்கள். ஆனால் சீஷர்களோ பயந்து தங்களை ஒளித்துக்கொண்டார்கள். "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" இயேசுவின்மேல் முழுமையான அன்பு கொண்டிருந்ததால் அந்த இரு ஸ்திரீகளும் கல்லறை வரை சென்றார்கள். ஒருவேளை இயேசுவின் தாய் என்பதால் இயற்கையான தாய் அன்பு மரியாளிடம் காணப்பட்டது என்று சொல்லலாம். ஆனால் மகதலேனா மரியாளிடம் எப்படி அந்த பூரண அன்பு காணப்பட்டது? இயேசு அவளிடமிருந்த ஏழு

பிசாசுகளை அவளை விட்டு அகற்றியிருந்தார். பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டபடியினால் அவ்வாறு அன்பு கூர்ந்தாள். பிசாசின் பிள்ளையாயிருந்த அவள் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்பட்டாள். இது எப்பேர்பட்ட விடுதலை! அன்பு சகோதரியே, உங்களையும் கூட தேவன் தமது குமாரன் மூலமாக பிசாசின் கிரியைகளாகிய பல்வேறு பாவங்களிலிருந்து விடுவித்திருக்கலாம். விடுதலையின் சந்தோஷத்தை அனுபவிக்கின்ற நீங்கள் முடிவுபரியந்தம் இயேசுவின் மேல் அன்புகூர வேண்டியது அவசியமல்லவா? உலகத்தில் அன்புகூராதிருங்கள். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாயிருக்கிறது. உலக ஜனங்களுக்கு பயந்து கொண்டு அந்த சீஷர்களைப் போல் உங்களை ஒளித்துக்கொள்ளாதீர்கள். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது.

**முதலாவது கல்லறையினிடத்தில் இருந்தவள் (First At The Tomb)**

இயேசு அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் அதாவது வாரத்தின் முதல்நாளில் சுகந்தவர்க்கமிடும்படி கல்லறையினிடத்திற்கு மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் வந்தார்கள். ஆனால் "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார்" (மாற்.16:9). மற்ற ஒருவரும் முதல் முதல் இயேசுவை தரிசிக்காமல் மகதலேனா மரியாள் மட்டும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றதற்குக் காரணமென்ன? கல்லறையில் இயேசுவைக் காணவில்லை என்ற செய்தி அறிந்து, மற்ற சீஷர்களும் ஸ்திரீகளும் கல்லறையினிடத்திற்கு வந்து பார்த்து விட்டு மீண்டும் தங்கள் இடத்திற்குத் திரும்பிப் போய்விட்டார்கள் (யோவா.20:1–10). ஆனால் மகதலேனா மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள். இயேசுவின் மேல் அவள் கொண்டிருந்த அன்பினால் அவள் கல்லறையை விட்டு அகலாதிருந்தாள். அதனால் இயேசுவை முதல் முதல் தரிசிக்கும் பாக்கியம் பெற்றாள். அன்பு சகோதரியே, கர்த்தருடைய நாளிலே கர்த்தருக்கு சுகந்தவர்க்கமிட வந்தவள் கர்த்தரை தரிசித்தாள். நீங்கள் கர்த்தருடைய நாளிலே எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? சபையாகக் கூடி தேவனை ஆராதிக்கவா அல்லது இப்பிரபஞ்சத்தின் தேவைனைப் பிரியப்படுத்தவா? சிந்தியுங்கள். இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் உலக சம்பத்தைக் காட்டி தன்னைப் பணிந்து கொள்ளும்படி தந்திரமாக செயல்படுவான் உங்களுடைய உலகப்பிரகாரமான தேவைகள், மற்றும் விருப்பங்களை அறிந்தவனாய் உங்களை மோசம்போக்கும்படி சுற்றித்திரிகிறான். இயேசுவையே வஞ்சிக்கத் திட்டமிட்டவன் உங்களை விட்டுவிடுவானா? மத்தேயு4:10,11–ல் இயேசுவைப் பார்த்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத்தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்" வேதவசனத்தினால் அவனை ஜெயித்தார். பிசாசு கிறிஸ்தவர்களையே குறிவைத்துள்ளான். ஞாயிற்றுக் கிழமை தான் சகல வைபவங்களும், தேர்வுகளும் நடைபெறுகின்றன. என்னசெய்வது எனக்கு வேலைகிடைக்காமல் கஷ்டப்படுகிறேனே என்று சொல்லி வாரத்தின் முதல் நாளை கர்த்தருடைய சமூகத்தில் செலவிட்டு தேவனை ஆராதிப்பதைத் தவிர்த்து உலகவேலையை நோக்கி ஓடுகின்றனர். கர்த்தருடைய நாளை இவர்கள் கொள்ளையடிக்கின்றனர். சகோதரியே, சற்று சிந்தியுங்கள் "சபை

கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி.10:25). இல்லையெனில் கர்த்தருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும்.

**முதலாவது உயிர்த்தெழுதலை அறிவித்தவர்கள் (First To Proclaim Resurrection)**

கர்த்தருடைய தூதன், "சீக்கிரமாய்ப் போய், அவர் (இயேசு) மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குசொன்னேன் என்றான். அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்" (மத்.28:7,8). பொதுவாக ஒரு செய்தி வெகு சீக்கிரத்தில் பரவ வேண்டுமென்றால், பெண்களிடம் கூறிவிட்டால் போதும் பல இடங்களுக்கு மின்னல் வேகத்தில் அந்த செய்தி சென்றடைந்து விடும் என்பார்கள். ஸ்திரீகளுக்குள்ளே இந்தகுணம் இருக்கத்தான் செய்கிறது. அதனால் தான் என்னவோ, கர்த்தருடைய தூதன் இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை ஸ்திரீகளின் மூலம் சீஷர்களுக்கு அனுப்புகிறார். எப்படியோ, இந்த மாபெரும் நற்செய்தியை உண்மையான சந்தோஷத்துடன் மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் முதன் முதலாக சீஷர்களுக்கு அறிவித்தார்கள். சகோதரியே, நீங்கள் என்னநினைக்கிறீர்கள்? ஸ்திரீகளுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்கிறீர்களா? வேதவாக்கியங்களை தெளிவாகப் புரிந்துகொள்வோம். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; ...(1தீமோ.2:12) என்று வேதம் கூறுகிறது. வேதவாக்கியத்தின்படி நாம் உபதேசிக்கவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் அதிகாரத்தைப் பெறவில்லை. ஆனால் மத்.28:7,8–ன்படி கர்த்தருடைய அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கலாமே. கர்த்தருடைய காரியத்தில், கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கான காரியத்தில் ஈடுபடுவதில் முதலாவதாக இருப்போம்.

*–தொடரும்*

## நடப்புச் செய்திகள்

- ரயில் நிலையங்களில் காய்கறி கடை 7,500 இடத்தில் அமைக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் லாலூபிரசாத் கூறினார்
- காவிரி நீர் பிரச்சனை தமிழக அரசின் நடவடிக்கையால் சுமூக முடிவு ஏற்படும் என்று முதல்வர் உறுதி.
- காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.13லட்சம் கடன் உதவியை திண்டுக்கல் கலெக்டர் வாசுகி வழங்கினார்.
- இந்தியாவுடன் அனுசக்தி ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதியில் கையெழுத்தாகும். அமெரிக்க வெளியுறவு மந்திரி தகவல்.
- புதிதாக பொறுப்பேற்ற இங்கிலாந்து பிரதமருக்கு மன்மோகன் சிங் வாழ்த்து.

கிறிஸ்துவ தலைமைத்துவ
பயிற்சி பாடங்கள்
Christian Leadership
Training Course

பாடம் - 18

# யார் பிரசங்கியார்?

## Who Is a Preacher?

**J.C.Choate**

*-Translated by G.Daniyal, Chennai*

பிரசங்கியார் யார்? பிசரங்கியார் என்பவர் யார் என்பதையும், அவர் யார் அல்ல என்பதையும் உங்களுக்கு சொல்ல முயற்சிக்கிறேன். இந்தப் பாடத்தில் கற்றுக் கொள்ளப் போகிற சில உண்மைகளைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படலாம். முதலாவது பிரசங்கியார் யார் என்பதையும், அவர் எப்படி அழைக்கப்படுகிறார் என்பதையும் அவருடைய பணிகளில் சிலவற்றையும் பார்ப்போம்.

பிரசங்கியார் பணிவிடைக்காரன் அல்லது சேவகன் என்று அழைக்கப்படுகிறார். அநேகர் பிரசங்கியாரை சபையில் ஒரு பிரத்தியேகமான ஊழியர் என்று நினைத்தாலும், உண்மையாகவே எல்லாக் கிறிஸ்தவர்களும் ஊழியர்களே. அதாவது பிரசங்கியாரும் சபையின் அனைத்து அங்கத்தினருக்கும் தங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கும் ஊழியம் செய்ய வேண்டும். அவர்கள் தேவைப்படுகிற யாவருக்கும் தங்கள் சக மனிதர்களுக்கும் கரிசனையோடு உதவி செய்ய வேண்டும். முதலாவது கிறிஸ்தவர்களுக்கும் பின்பு மற்றவர்களுக்கும் உதவவேண்டும். பவுல் தன்னை புறஜாதியருக்கு ஊழியக்காரரென்று சொல்லுகிறார் (ரோமர்15–16). வேறொரு தருணத்தில் பரிசுத்தவான்களுக்கு உதவும் பொருட்டு எருசலேமுக்கு செல்கிறேனென்று சொல்லுகிறார் (ரோமர்15–25). நாம் எல்லாரும் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்கள் (2கொரி 3–6). பவுல் தன்னை சுவிசேஷத்திற்கு ஊழியக்காரர் என்று கொலோசெயர் 1–23–ல் சொல்லுகிறார்.

பிரசங்கியார் ஒரு சுவிசேஷகராக இருக்கலாம். சுவிசேஷகனாக விவரிக்கப்படும் ஊழியர் தான் ஒவ்வொரு இடமாகச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பார் (அப் 21–8, எபே.4.11,2தீமோ 4–5). பிரசங்கியார் பல இடங்களுக்குச் சென்று வேதத்தைக் குறித்து போதிக்கிறவராயிருக்கலாம். மதபோதகர் என்கிற வார்த்தை வேதத்திலே காணப்படாவிட்டாலும் அவருடைய வேலையைப் பற்றி விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது. வேதத்தை போதிக்கிறவர் யார் என்றால் கர்த்தருக்காக மிகவும் வைராக்கியம் கொண்டவராகவும் பல தூரமான இடங்களுக்குச் சென்று அநேக நாட்கள் தங்கி சுவிசேஷத்தைப் பிரசங்கித்து கிறிஸ்துவினுடைய நோக்கத்தை நிறுவுகிறதாகவும் இருப்பார். பவுலும் புதிய ஏற்பாட்டில் மற்ற அநேகரும் இப்படிப்பட்டவர்களல்லவா?

பிரசங்கியார் ஒரு சேவகன். பவுல், பேதுரு, யாக்கோபு, மேலும் புதிய ஏற்பாட்டு காலத்தில் மற்ற எல்லா பிரசங்கியார்களும் தங்களை சேவகர்கள் என்றே அழைத்தனர் (ரோமர் 1:1, யாக்கோபு 1:1, 2பேதுரு 1:1). அதாவது அவர்கள் தங்களை கிறிஸ்துவுக்கும் சக மனிதர்களுக்கும் தங்கள் வாழ்கையையும் சக்திகளையும் அர்ப்பணித்து அவர்களுக்கு ஊழியகாரர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்களை அப்படிக் குறிப்பிடுகிறதுக்கு வெட்கப்படவில்லை.

பிரசங்கியார் என்பவர் இதற்கும் மேலானவர். வேறு விதமாகச் சொன்னால் அநேகக் காரியங்களை குறித்து குற்றஞ் சாட்டுகிறபடி அல்ல. இந்த சமயத்தில் அவர் எப்படிப்பட்டவராக இல்லை என்பதை குறித்து பார்ப்போம். பிரசங்கியார் சபையின் போப்

அல்ல. கிறிஸ்துவே சபையினுடைய ஒரே தலைவராயிருக்கிறார் (எபே. 1–22, 23; கொலோ 1–18). பிரசங்கியார் பிராந்திய சபையினுடைய தலைவனும் அல்ல அது பிரசங்கியினுடைய வேலையுமல்ல. நாம் பார்த்தபடி மக்களை அதிகாரம் செய்வதற்கு மாறாக அவர்களுக்கு சேவை செய்கிறவராக இருக்கிறார். பிரசங்கியினுடைய வேலையையும் சேர்த்து சபையினுடைய அனைத்து வேலைகளையும் மேற்பார்வை செய்யவேண்டியது மூப்பர்களுடைய பணி.

பிரசங்கி ஒரு அப்போஸ்தலன் அல்ல. இன்றைக்கு ஒருவரும் அப்போஸ்தலன் அல்ல. ஒருவன் அப்போஸ்தலனாக இருக்க வேண்டுமென்றால் அவன் யோவான் ஞானஸ்நானம் கொடுத்த நாள் தொடங்கி கர்த்தர் பரலோகத்திற்கு எடுத்து கொள்ளப்பட்ட நாள் வரையும் சீஷர்களோடே இருந்திருக்க வேண்டும். உண்மையாக கர்த்தருடைய உயிர்தெழுதலைக் கண்ணால் கண்ட சாட்சியாக இருக்க வேண்டும் (அப்:1–22,23). உலகத்திலே இன்றைக்கு அநேகர் ஏன் பிரசங்கியார்கள் கூட தங்களை அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் போலிகளும் ஏமாற்றுகிறவர்களும் ஆவார். குரு அல்லது பாஸ்டர், பிஷப், எல்டர் (மூன்று வார்த்தைகளும் ஒரே வேலையை குறிப்பவை) அல்லது (உதவிக்காரர்) டிக்கன் என்று அநேகர் சொல்லுகிறபடி அல்ல. 1 தீமோத்தேயு:3, மற்றும் தீத்து – 1ல் சொல்லப்பட்டுள்ள தகுதிகளை உடையவராகயிருந்தால் மேற்குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் ஒருவராக இருக்கலாம். இன்று பாதிரியார் (பாஸ்டர், பிஷப்) மதகுரு மேலும் உதவிக்காரர் (டிக்கன்) என்ற பட்டங்கள் பொதுவாக பிரிவினை சபை பிரசங்கியார்களுக்கு கொடுக்கப்படுபவைகளாகும். அவர்கள் கர்த்தருடைய சபையின் அங்கங்களோ அல்லது வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள (மூப்பர்களுக்கான) தகுதி உடையவர்களோ அல்ல.

பிரசங்கியார் அற்புத சுகமளிப்பவரோ அல்லது அற்புதங்களை செய்பவரோ அல்ல. அப்போஸ்தலர்கள் மற்றும் அற்புதங்கள் செய்யும் படியாக பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு அவர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களுக்கு மட்டுமே அற்புதம் செய்யக் கூடிய வரம் இருந்தது. இன்றைக்கு ஒருவேளை அற்புதங்கள் செய்வதாக இருந்தாலும் நிச்சயமாகவே மனிதர்களால் உருவாக்கப்பட்ட சபைகளிலும் நிறுவனங்களிலும் உள்ள பிரசங்கியாலோ மற்றவர்களாலோ பிரிவினை சபையின் நாமம் தரித்தவர்களாலோ இந்த விதமான அற்புதங்களைச் செய்யமுடியாது.

1 கொரிந்தியர் 13ஆம் ஆதிகாரத்திலே பவுல் நமக்கு சொல்லுகிறபடி கர்த்தருடைய நிறைவான சித்தம் அல்லது சட்டம் வந்த பின்பு அற்புதங்கள் தேவைப்படாது. இதற்கு பின்பும் நீங்கள் அந்த விதமான பிரசங்கியார்கள் அற்புதங்கள் செய்ய முடியுமென்று நினைத்தால் அப்படிப்பட்டவர்கள் மக்கள்மேல் புதிய கால்களையோ, கைகளையோ, உண்டாக்கும்படி செய்து கண்களையோ கொடுத்து அல்லது மரித்தோரை எழுப்பவோ, மேலும் இதுபோன்றவைகளைச் செய்கிறார்களா என்று சோதித்துப் பாருங்கள். கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் இந்த விதமான அதிசயங்களைச் செய்தார்கள். தலைவலியையோ அல்லது கண்ணுக்குதெரியாத புண்ணையோ அவர்கள் குணப்படுத்தவில்லை.

பிரசங்கியார் "கனம் பொருந்திய" "மகாகனம் பொருந்திய" "மகா மகா கனம் பொருந்திய" மேலும் பல பட்டங்களால் அழைக்கப்படுபவர் அல்ல, அவர் ஒரு

ஆவிக்குரிய தந்தையோ அல்லது மத வைத்தியரோ அல்ல. மனிதர் இந்த விதமான பட்டங்களை விரும்பி அதனால் தன்னை உயர்த்திக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். ஆனால் கர்த்தர் அவர்களைக் கண்டனம் செய்கிறார். இயேசு சொன்னார்."பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்கு பிதாவாயிருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார். உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (மத்தேயு : 23:9–12). சங்கீதக்காரன் தாவீது தேவனை குறித்து சொல்லும் போது அவர் நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது என்று சொல்கிறார் (சங். 111:9).

வேதத்திலே காணப்படுகிற பிரசங்கி சாதாரண மனிதனே அவர் சபையிலுள்ள மக்கள் மீதோ அல்லது அது தொடர்பான அலுவல்கள் மீதோ அதிகாரம் செலுத்துபவர் அல்ல. கர்த்தருடைய சபையை பொருத்த வரை அந்த சபையில் தகுதியுள்ள மூப்பர்கள் இருந்தால் அவர்களுடைய மேற்பார்வையில் தேவனுடைய வார்த்தையையும் பிரசங்கிக்க வேண்டிய பிரசங்கியார். தகுதியுள்ள மனிதர்கள் யாரும் இல்லாத பட்சத்தில் சபையிலுள்ள சகோதரர்கள் வேதத்தின்படி தீர்மானித்து ஊழியஞ்செய்யலாம். அவர் அந்த சபையினுடைய தலைவர் அல்ல. அவருக்கு மிக உயர்ந்த அல்லது மதிக்கப்பட்ட மனிதர்களுக்குரிய பட்டங்களைக் கொடுக்கக் கூடாது. மாறாக அவர் தேவனுடைய வார்ததையை மதித்து ஊழியம் செய்து பிராந்திய சபையின் மக்களுக்கு தேவைகளுக்கேற்ப சேவை செய்ய வேண்டும்.

எந்த இடத்திலும் வேதாகமம் உலக ரீதியாகவோ அல்லது பிராந்தியரீதியாகவோ ஒருவன் சபையினுடைய தலைவனாக இருந்தாகச் சொல்லவில்லை. கொரிந்துவிலோ எபேசுவிலோ, எருசலேமிலோ அல்லது வேறு இடங்களிலோ சபையின் போதகராக அல்லது மேய்ப்பராக ஒருவரே இருந்ததில்லை, கர்த்தரும் அந்த விதமான பதவியில் இருக்கும் யாரையும் அங்கீகரிக்கவில்லை. இந்த விதமான சூழ்நிலை தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக அரசியல் தன்மையையும் அதிகாரத்தையும் உண்டாக்குகிறது.

1 கொரிந்தியர் 9–16 –யின் படி இதைக்குறித்த மனப்பான்மை பின்வருமாறு "சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தும் மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது சுவிசேஷத்தைபிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ".

நீங்கள் ஒரு பிரசங்கியாரா? பிரசங்கியாராக இருக்க நீங்கள் விரும்புகிறீரா? எந்த விதமான பிரசங்கியாக இருப்பீர்கள்? நீங்கள் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் விவரித்துள்ள பிரசங்கியாராக இருக்க விரும்புகிறோம்.

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்
யோவா. 12:26

## உண்மையான சபை தோன்றிய வரலாறும்
## பிரிவினை சபைகள் தோன்றிய வரலாறும்

### உண்மையான திருச்சபை

| சபை | வருடம் | தோற்றுவித்தவர் | இடம் |
|---|---|---|---|
| கிறிஸ்துவின் சபை | கி.பி.33 | கிறிஸ்து | எருசலேம் |
| ரோமர்16:16 | | மத்தேயு16:18 | அப்.2:14 |
| எபேசியர்5:32 | | அப்.20:28 | ஏசாயா2:2-4 |
| கொலோ1:18 | | எபேசியர்1:22 | லூக்கா24:47-49 |

### பிரிவினைக்கூட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. கத்தோலிக்க சபை | கி.பி.607 | மூன்றாம் போனிபஸ் | ரோம் |
| 2. லுத்தரன் சபை | கி.பி.1517 | மார்டின் லூத்தர் | ஜெர்மனி |
| 3. இங்கிலாந்து சபை | கி.பி.1534 | எட்டாம் ஹென்றி | இங்கிலாந்து |
| 4. கால்வினிஸ்ட் சபை | கி.பி.1555 | ஜான் கால்வின் | ஸ்விட்சர்லாந்து |
| 5. பிரிஸ்பிட்டேரியன் சபை | கி.பி.1560 | ஜான் நாக்ஸ் | ஸ்காட்லந்து |
| 6. காங்கிரிகேஷனலிஸ்ட் சபை | | கி.பி.1592 | இராபர்ட் பிரவுன் ஹாலந்து |
| 7. பாப்டிஸ்ட் சபை | கி.பி.1607 | ஜான் ஸ்மித் | ஆம்ஸ்டர்டாம் |
| 8. அமெரிக்கன் பாப்டிஸ்ட் சபை | | கி.பி.1629 | ரோஜர் வில்லியம்ஸ் அமெரிக்கா |
| 9. நண்பர்கள் ஐக்கிய சபை | கி.பி.1665 | டெர்பி ஜார்ஜ்பாக்ஸ் | இங்கிலாந்து |
| 10. மெத்தடிஸ்ட் சபை | கி.பி.1739 | ஜான் வெஸ்லி பால் | இங்கிலாந்து |
| 11. கடைசிகால புனிதர்கள் சபை | | கி.பி.1830 | ஜோசப் ஜான் ஸ்மித் நியூயார்க் |
| 12. ஏழாம் நாள் சபை | கி.பி.1843 | வில்லியம் மில்லர் | நியூயார்க் |
| 13. கிறிஸ்தவ விஞ்ஞான சபை போஸ்டன் | கி.பி.1881 | மேரி பெக்கர் எட்டி | |
| 14. யேகோவா சாட்சிகள் | கி.பி.1884 | சார்லஸ் டி.ரஸல் | பென்சில்வானியா |
| 15. தேவனுடைய சபை | கி.பி.1886 | ரிச்சர்ட் ஸ்பர்லிங் | டென்னிஸி |
| 16. நசரேயர் சபை | கி.பி.1895 | பி. எப். பிரீஸ் | கலிபோர்னியா |
| 17. பெந்தெகொஸ்தே சபை | கி.பி.1901 | சில குழுவினர் | இலங்கை |
| 18. அசெம்பிளி ஆப் காட் சபை | | கி.பி.1914 | சில குழுவினர் ஹாடஸ் பிரிஸ் |
| 19. இன்னும் அநேகம்........ | | | |

**கிறிஸ்துவின் வசனம் மாத இதழின் 27வது வாசகர் கருத்தரங்கு**

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு கிருஷ்ணகிரி மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கிறோம். அனுமதி இலவசம்.

நோக்கம் : ★ 1992முதல்2006 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

★27வது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

நாள் : ஜூலை 28 – ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி

இடம் : கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம், சோரகாயலபள்ளி கிராமம்,

காலிங்கவரம் 653 117, கிருஷ்ணகிரி மாவட்டம்.

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*

**Bro.** சாலொமோன் வெங்கடப்பா 09480388123

# பொறாமை
## Envy

- A.Prabakaran

இன்றைய நாளிலே அநேகரிடத்தில் பொறாமை என்ற காட்டுத்தீ அதிகமாக பரவி வருவதை காண்கிறோம். இந்த காட்டுதீ உண்மை கிறிஸ்தவர்களிடத்திலும் பரவி வருகிறது. இந்த காட்டுத்தீயை, அன்பு என்ற ஜீவ தண்ணீரைக் கொண்டு ஊற்றி அணைக்கவேண்டும். ஏனெனில், நாம் தேவனுடைய பிள்ளைகள் இதை வளரவிடக்கூடாது.

**முதலாவது பொறாமை எங்கிருந்து வருகிறது என்று காண்போம்:**

இந்த பொறாமை நம் இருதயத்திலே இருந்துதான் வருகிறது என்று பரிசுத்தவேதாகமம் சொல்லுகிறது. "சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன் பொறாமையோ எலும்புருக்கி" (நீதி.14:30). ஆம் இந்த பொறாமை கேன்சர் நோய்யை போன்றது. இந்த நோய் வந்தவர்கள் உடனே இறப்பதில்லை மெல்ல மெல்ல உயிரை அழிக்கும்.

வேதத்தில் பொறாமை கொண்ட அநேகரை நாம் அறிவோம். குறிப்பாக ஆதி.4:1–9 வரை வாசிக்கும்போது ஆபேலின் காணிக்கையை கர்த்தர் ஆசீர்வதித்தார். காயினுடைய காணிக்கையை கர்த்தர் ஆசீர்வதிக்கவில்லை. இதனால் பொறாமை கொண்ட காயின் ஆபேலை கொலை செய்து போட்டான் என வாசிக்கிறோம். ஆதியிலே முதல் முதல் சகோதரர்களுக்குள்ளே ஏற்பட்டது இந்த பொறாமை. இன்றுவரை யாரையும் விட்டுவைக்கவில்லை. எல்லோரும் இந்த பொறாமைக்கு அடிபணிந்துவிடுகின்றனர். இந்த பொறாமை உள்ளவன் எப்பொழுதும் கவலை கொண்டவனாகயிருப்பான். நிம்மதியில்லாமல், தூக்கமில்லாமல் பொறாமை கொண்டு மற்றவர்களை அழிக்க திட்டமிடுவான். அவனுக்குள் இருக்கும் பிசாசு இந்தவிதமாக அவனை வழிநடத்துவான்.

யோசேப்பின் சகோதரர்கள் அவன் மீது பொறாமை கொண்டு அவனை தூக்கி இஸ்மவேலரிடம் 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். இன்றும் அந்த நிலை தொடர்கிறது (ஆதி.37ம் அதிகாரம்). இப்படி பல நிகழ்ச்சிகளை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். பொறாமை கொண்டவர்கள் தங்களுக்கு தாங்களே தீமையை வரசெய்து கொள்கின்றனர். இது போன்று இன்று நமக்கு அறிமுகமானவரோ, உறவினரோ அல்லது நண்பர்களோ முன்னேற்றம் அடையும்போது ஒரு சில மனிதர்களுக்குள் இந்த பொறாமை உள்ளத்திலே ஏற்பட்டு வளர்ச்சியடைந்து ஆலமரத்தைப்போல விழுது விட ஆரம்பிக்கிறது. இது கிறிஸ்தவர்களையும் தொற்றிக்கொள்கிறது. ஏன் நாம் கூடிவருகிற சபைக்குள்ளும், ஊழியர்களிடமும் கூட காணப்படுகிறது. இதை நினைக்கும்போது எனக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுக்கிறது. எனக்கு அன்பான வாசகரே, நீ எப்படிப்பட்ட மகனாக, மகளாக உள்ளாய்? இந்த பொறாமையை உன்னை விட்டு அகற்று. அப்பொழுது நீ கர்த்தருக்கு பிரியமானவனாக, ஏற்றவனாக மாறுவாய். தேவன் உன்னை அதிகமாக நேசிப்பார். அவருடைய வார்த்தைக்கு செவி கொடு. பொறாமை எலும்புருக்கி. சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன். உனக்கு ஜீவன் வேண்டுமா? அல்லது நீ ஒரு எலும்புருக்கியைப்போல மாறவேண்டுமா? இன்றே தீர்மானம்செய். "பொல்லாத மனுஷர்மேல் பொறாமை கொள்ளாதே அவர்களோடே இருக்கவும் விரும்பாதே. அவர்கள் இருதயம் கொடுமையை யோசிக்கும் அவர்கள் உதடுகள் தீவினையைப் பேசும்" (நீதி.24:1,2).

**பொறாமையை எப்படி தடுப்பது?**

எல்லாரும் தேவனால் உண்டாக்கப்பட்டவர்கள் என்று நினைக்கவேண்டும். ஒருவனை உயர்த்துவதும், ஒருவனை தாழ்த்துவதும் தேவனே என்று நினைக்கவேண்டும். யோபு 1–ம் அதிகாரத்தை வாசிக்கையில் எல்லாவற்றையும் இழந்தபோதும்கூட யோபு தேவனைப் பற்றி குறைசொல்லவுமில்லை, தேவனைத் தூஷிக்கவுமில்லை. கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் என்று பொறுமையாக இருந்தார். ஆகவே நாம் துன்படும்போது மற்றவர்களைப் பார்த்து பொறாமை கொள்ளக்கூடாது. தேவபிள்ளைகளான நமக்கு வரும் சோதனைகள் எல்லாம் நாம் தேவனுக்குள் பெலப்பட நமக்கு கொடுக்கப்படுகிறது என அறிந்துகொள்ளவேண்டும் (1கொரி.10:13).

அன்பான சகோதர, சகோதரிகளே, நாம் எல்லோரிடமும் அன்பாக பழகவேண்டும். நம்மீது பலரின் பார்வை பட்டுக்கொண்டே இருக்கும். நமது செயல்களை கூர்ந்து கவனிப்பார்கள். நாம் நமது பழைய நடக்கைகளை விட்டு விட்டு, புதிய மனுஷனாக இருக்க வேண்டும். “மோசம் போகாதிருங்கள் ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்” (1கொரி.15:33). நம்முடைய ஒரே நோக்கம் நித்திய ஜீவனைப் பெறுவதே. இதற்கு நம்மை நாமே தகுதிப்படுத்திக்கொள்ள கிறிஸ்துவின் வசனத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டும். இதற்கு நாம் ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவைகளைத் தரித்துக்கொள்ளவேண்டும். “நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்” (யாக்.1:2,3) ஆமென்.

## பொது அறிவுச் சோதனை

1. முதல் அணுசக்தி நீர் மூழ்கி கப்பல் எந்த நாட்டில் உருவாக்கப்பட்டது?
   அ)பிரான்சு ஆ)சீனா இ)அமெரிக்கா
2. சந்திரன் ஒரு முறை தன்னைத்தானே சுற்றிக் கொள்ள எவ்வளவு காலம் எடுத்துக்கொள்ளும்?
   அ)இருபது நாட்கள் ஆ)முப்பது நாட்கள் இ)இருபத்தெட்டு நாட்கள்
3. இரண்டாவது உலகப்போர் எப்போது முடிவுக்கு வந்தது?
   அ)14-8-1945 ஆ)8-6-1945 இ)1-10-1944
4. எரியும்போது வெண்மையான சுடரை கொடுக்கும் உலோகம் எது?
   அ)இரும்பு ஆ)தாமிரம் இ)மெக்னீசியம்
5. இந்திய அரசியல் சட்டத்தில் சிறப்பான இடத்தை பெறுபவர் யார்?
   அ)பிரதமர் ஆ)ஜனாதிபதி இ)கவர்னர்

விடைகள்: 1.அமெரிக்கா 2.முப்பது நாட்கள் 3.14-8-1945 4.மெக்னீசியம் 5.ஜனாதிபதி

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம்-4
# இயேசுகிறிஸ்துவின் இரண்டாம்வருகை தாமதம் ஏன்?

John S.Nathan, Gospel Minister
Mobile: 9841017621

–சென்ற மாத இதழின் தொடர்ச்சி

**இந்த கடைசி நாட்களில் நாம் என்ன செய்யவேண்டும்:**

1பேது.1:5–7; 4:13–14 தற்காலத்திலும் கிறிஸ்தவர்களாய் வாழ்பவர்களுக்கு பலபாடுகள், உபத்திரவங்கள், சோதனைகள், போராட்டங்கள் பலவகைகளிலும் தொடர்ந்து இருக்கும். ஆனால் விசுவாச சோதனைகளில் வெற்றி பெற்றவர்களுக்கு புகழ்ச்சியும் கனமும், மகிழ்ச்சியுமுண்டாகக் காணப்படும்.

**அவருடைய வருகையின் நோக்கம்:**

(கி.மு 2000) ஆதி.18:25 அவரை சர்வலோக நியாயாதிபதியாகவும் கி.மு 1000–ல் சங்கீதம்50:34 நம்முடைய தேவன் வருவார், ....தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க. கி.பி70–75–ல் எபிரெயர்9:27–28 அவர் நியாயந்தீர்க்கவும் இரட்சிப்பை அருளும்படி இரண்டாம் தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.

**இயேசுகிறிஸ்து கூறிய வாக்குறுதி:**

மத்தேயு24:30 அவர் வருவதை சகலமக்களும் கண்டுபுலம்புவார்கள். 1தெச.4:16–17 ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். 1தெச.5:2 இரவிலே.... 1:10–ல்; 1கொரி.15:51–52; 2கொரி.5:1–4; பிலி.1:25,26; 4:5; 2தீமோ.4:6–8; 2தெச.2:2–4; ரோம.13:11,12 இவைகளை வாசித்து உறுதிப்படுவோம்.

**யாக்கோபு:** 5:8 வருகை சமீபமாயிருக்கிறதே .......இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்.

**யோவான்:** வெளி.22:20 மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன். கர்த்தராகிய இயேசுவே வாரும் என்று நாமும் கூறி அழைக்க ஆயத்தமாயிருக்கிறோமா?

**கடைசி செய்தி:** மாரநாதா (maranatha) என்ற கிரேக்க வார்த்தையை இயேசு பேசிய அரெமிக்மொழி (இன்றைக்கு இம்மொழியை ஒரு சிறு கிராமத்தில் வசிக்கும் 400 பேர் மட்டுமே பேசுகிறார்கள்) ஆண்டவரே வாரும்! ஆம் நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார் சங்.50:3 அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க... நாம் ஆயத்தமாயிருப்போம், மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோமாக!

**நம்பிக்கையூட்டும் செய்தி:** இன்றைய 200 கோடி கிறிஸ்தவர்கள் அடுத்த 25 ஆண்டுக்குள் ஒருவரை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினால்.... 2032–ல் இருக்கபோகும் 400 கோடி மக்கள் 2100 க்கு முன்பாக ஒரு நபரை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினால் இந்த நூற்றாண்டின் முடிவில் உலக மக்கள் அனைவருமே கிறிஸ்தவர்கள் தான். தேவனை நம்பு.

உன்னால் முடியும் சகோதரா, உன்னால் முடியும் சகோதரியே!

பவுலடியார் ஆசியாவையே கிறிஸ்துவுக்குள்ளாக்கியவர். நீயும் பவுலாக மாற மாட்டாயா? மாறவேண்டாமா?

சிறுவர் பகுதி

# மார்த்தாள், மரியாள்

*வேத பகுதி: லூக்கா 10:38-42*

*-K.Mohan, B.Komarapalayam*



என் அருமை பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று நாம் மார்த்தாள், மரியாள் என்ற இரண்டு சகோதரிகளைக் குறித்துப் பார்ப்போம்.

இயேசு கிறிஸ்து பிரயாணமாய் போகையில் மார்த்தாளின் ஊருக்கு வந்தார். மார்த்தாளுக்கு இயேசுவை பார்த்தவுடன் ஒரே சந்தோஷம் அவரை தன்வீட்டிற்கு அழைக்கவேண்டும் என்று நினைத்து அழைத்தாள். இயேசுவும் உடனே அவள் வீட்டிற்கு போனார். மார்த்தாளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து. இயேசுவினிடத்தில் வந்து ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்கு கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் ஆண்டவரே என்றாள். பார்த்தீர்களா? மரியாள் வேலைசெய்யாமல் இயேசுவின் போதனைகளைக் கேட்டுக்கொண்டிருப்பதை பார்த்த மார்த்தாளுக்கு பொறுக்க முடியவில்லை.

இயேசு மார்த்தாளை நோக்கி: மாத்தாளே, மாத்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். என்ன பிள்ளைகளா புரிகிறதா. மார்த்தாள் தான் இயேசுவை வீட்டிற்கு அழைத்தாள் ஆனால் அவளோ வீட்டுக்கு வந்த இயேசுவோடு உட்கார்ந்து பேசவில்லை. மாறாக பற்பல வேலைகளை செய்வதில் முக்கிய கவனம் செலுத்தினாள். மரியளோ அப்படியில்லை இயேசுவின் பாத்தினருகே உட்கார்ந்து இயேசு சொல்வதைக் கவனமாக கேட்டுக்கொண்டிருந்தாள். இதுதான் தேவையானது. வேலையை எப்பொழுது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். ஆனால் தேவையான நேரத்தில் தேவையானதிற்கு முக்கியதுவம் கொடுக்காமல் இருப்போமானால் பின்பு விரும்பி தேடினாலும் கிடைக்காது. ஆகையால் தான் மரியாளைக்குறித்து சொல்லும்போது தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். நீங்கள் இந்த விதமாக நல்ல பங்கை தெரிந்து கொண்டீர்களா? அப்படியில்லை என்றால் முதலாவது கர்த்தருடைய வார்த்தைக்கு முதலிடம் கொடுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்:**

" முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" மத்.6:33.

## வேத அறிவுப் போட்டி எண்.83

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் **இம்மாதம் 25ம்தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். **பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்று ஆண்டவர் யாரை பார்த்து சொன்னார்?
2. நாங்கள் உபவாசம்பண்ணி, எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினோம்; எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார் என்ற செராயாவின் குமாரன் யார்?
3. கட்டுண்டுவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்துகொள்ளப்போனவன் யார்?
4. வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயாதே; உன் காலைத் எதற்கு விலக்குவாயாக என சாலொமோன் கூறுகிறார்?
5. பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு இப்பொழுது எதற்கு அடிமைகளானீர்கள்?
6. நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று எவர் சொல்லுகிறார்?
7. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் எவரால் உண்டாயிருக்கிறது?
8. நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் எதைக் கற்றுக்கொள்கிறேன் என்றான் சங்கீதக்காரன்?
9. கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால் உடனே சஞ்சலப்படாமலும் என்ன செய்யாமலும் இருங்கள்?
10. சர்வவல்லவரை நாம் கண்டுபிடிக்கக்கூடாது; அவர் எதிலும், எதிலும் பெருத்தவர்?

ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில்
வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும்
கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்;
அவருக்கே கனமும் நித்திய வல்லமையும்
உண்டாயிருப்பதாக. ஆமென். 1தீமோத்தேயு6:16

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202
Editor: B.Arjunan.


R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without pre-payment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th July 2007.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**






**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள்
மேலும்




**உங்கள் WIN TV யில்**

ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும்
வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**

தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.





**Radio & TV** -யில் வெளிவந்த தேவ
செய்திகள் அடங்கிய **CD & DVD** -க்கள்
தேவைப்படுவோர் எங்களோடு தொடர்புகொள்ளவும்.

*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202. S. India*

*Phone:04543-263278 Mobile:94435-58041 e.mail:thewordofchrist@sancharnet.in*

**Monthly Magazine**

**To**

***From***

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202*
*S. India*